**முக்கிய வார்த்தைகள்:**
ரமதான்
இறைஞ்சுங்கள் / பிரார்த்தனை செய்யுங்கள்
மன்னியுங்கள்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**20 மார்ச் 2026 / 30 ரமதான் ஹிஜிரி 1447**

# <u>ரமதானின் இறுதியில் சிந்திப்பதும் ஆதரவு வைப்பதும்</u>

الْحَمْدُ لِلَّهِ الَّذِي هَدَانَا لِلْإِسْلَامِ، وَوَفَّقَنَا لِإِدْرَاكِ شَهْرِ الصِّيَامِ وَالْقِيَامِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ الْمَلِكُ الْعَلَّامُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ سَيِّدُ الْأَنَامِ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ خَيْرِ مَنْ صَلَّى وَصَامَ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ الْكِرَامِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது பக்தியை தொடர்ந்து பலப்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவோமாக! அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! குறிப்பாக, **ரமதான்** மாதத்தின் இந்த இறுதி நாளில் அல்லாஹ்வின் மீது முழு கவனம் செலுத்துவோமாக. எல்லாம் வல்ல அல்லாஹ், நமது நோன்பையும் நமது தொழுகைகளையும், திருக்குர்ஆன் ஓதுதலையும், மற்ற அனைத்து வணக்க, வழிபாட்டுச் செயல்களையும் ஏற்றுக் கொள்வானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

**ரமதான்** மாதம் முடிகின்ற நிலையில் உள்ளது; அது நம்மை விட்டும் கடந்து செல்வதற்கு இன்னும் சில மணி நேரங்களே உள்ளன. எவர்கள் இந்த **ரமதான்** முழுவதிலும் நற்காரியங்களைச் செய்வதில் ஓய்வில்லாமல் முயற்சித்தார்களோ, அவர்கள் தமது முயற்சியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கட்டும். **ரமதானின்** இந்த இறுதி நொடிகளில் அதே உணர்வுகளால் நிரப்புவோமாக! எவர்கள் தமது வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதில் பின் தங்கி விட்டதாக உணர்கிறார்களோ, அவர்கள் நிராசையாக வேண்டாம்; நமது செயல்களை சீர் செய்து கொள்வதற்கு இன்னும் நேரங்கள் உள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

"ஒவ்வொரு செயலும் அதன் இறுதி முடிவைப் பொருத்தே தீர்மானிக்கப்படுகின்றது" என நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது [ஸல்] அவர்கள் ஒரு ஹதீதில் நமக்கு நினைவூட்டவில்லையா? [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்]

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

அல்ஹம்துலில்லாஹ், **ரமதானின்** நோன்பை, மாதம் முழுவதும் நிறைவேற்றி முடிக்கும் நிலையில் இருக்கின்றோம்; நம்மில் பலர் இரவுத் தொழுகைகளை நிறைவேற்றியவர்களாகவும், திருக்குர்ஆனை ஓதி, **பிரார்த்தனைகளை** அதிகமாகச் செய்தவர்களாகவும் இருக்கின்றோம்; ஜகாத், ஸதகா போன்ற தர்மங்களைச் செய்தவர்களாகவும், இன்னும் பல நற்காரியங்களைச் செய்தவர்களாகவும் இருக்கின்றோம். **ரமதானின்** இந்த கடைசி நேரத்தில், நம்மில் சிலர் : இன்னும் நாம் என்னென்ன செய்ய வேண்டும்? எனக் கேட்பவர்கள் இருக்கலாம்.

அவர்களின் கேள்விக்குப் பதிலாக, இன்றைய "குத்பா" பிரசங்கமானது, **ரமதான்** முழுவதிலும் நாம் நிறைவேற்றிய நற்காரியங்களில் சிந்தனை செய்து, அவற்றை மறுமதிப்பீடு செய்யுமாறு நம்மைக் கேட்டுக் கொள்கிறது. காரணம், நல்லடியார்கள், தமது வணக்க, வழிபாட்டுச் செயல்களை நிறைவேற்றி முடித்த பின், தமது நற்காரியங்கள் அல்லாஹ் சுப்ஹானஹு

வதஆலாவினால் உண்மையாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனவா எனக் கவலை கொள்பவர்களாக இருப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, **ரமதான்** முழுவதிலும் நாம் நிறைவேற்றிய நற்காரியங்கள் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதில் நாம் எந்தளவு நம்பிக்கையுடன் இருக்கின்றோம் எனச் சிந்திக்க வேண்டும். ஒருவேளை, அடுத்த ஆண்டின் ரமதான் மாதத்தை அடையக் கூடிய பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லையெனில், இந்த ரமதானில் நாம் செய்த நற்காரியங்கள் மறுமையில் நாம் வெற்றி பெறுவதற்குப் போதுமானவையாக இருக்குமா? எனவும் சிந்திக்க வேண்டும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!
எனினும், நாம் ஏற்கனவே நிறைவேற்றி முடித்துள்ள வணக்க வழிபாட்டுச் செயல்களை இந்த பிரசங்கம் குறைத்து மதிப்பிடுவதாக நினைத்து விடக் கூடாது. மாறாக, **ரமதானின்** எஞ்சியுள்ள நொடிப் பொழுதுகளை சிறப்பாகப் பயன்படுத்த வேண்டுமென நம்மனைவருக்கும் அழைப்பு விடுப்பது தான், இதன் நோக்கமாகும். இப்புனிதமிக்க மாதத்தில் ஒவ்வொரு ”முஃமின்” [ஓரிறை நம்பிக்கையாளர்] அடைய வேண்டிய முக்கிய இலக்குகளில் ஒன்று, நமது **பாவங்களுக்கான மன்னிப்பை** அல்லாஹ்விடம் பெறுவதாகும்.

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:
”எவரது பாவங்கள் **மன்னிக்கப்படாத** நிலையில், **ரமதான்** மாதம் கடந்து சென்று விடுகிறதோ அவர் நாசமாகட்டுமாக” [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்]

எனவே, நாம் ஏற்கனவே திருக்குர்ஆனை பரிபூரணமாக ஓதி முடித்திருந்தாலும், தராவீஹ் தொழுகையைத் தொழும் வாய்ப்பு முடிந்து விட்ட போதிலும், கட்டாயக் கடமையான நோன்பை நோற்பதற்கானக் காலமும் கடந்து விட்ட போதிலும், அனைவருக்கும் வணக்க வழிபாட்டுச் செயல்களின் ஒரு வாசல் தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டுள்ளது; அதுதான், **”துஆ” [பிரார்த்தனை]** செய்வதாகும். ஆம், அன்பிற்குரிய சகோதரர்களே!

"துஆ" எனும் வணக்க வழிபாட்டின் வாசலும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் **மன்னிப்பு** மற்றும் அவனது கிருபையைத் தேடுவதற்கான வாசலும் தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்த விரும்புபவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஓரிறை நம்பிக்கையாளரைப் பொருத்த வரை, **பிரார்த்தனை** செய்வது மிகவும் முக்கியமான வணக்கமாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-ஃபுர்கான்" எனும் அத்தியாயத்தின் 77-வது வசனத்தில் கூறுகிறான்:

قُلْ مَا يَعْبَؤُا۟ بِكُمْ رَبِّى لَوْلَا دُعَآؤُكُمْ ۖ فَقَدْ كَذَّبْتُمْ فَسَوْفَ يَكُونُ لِزَامًۢا ﴿٧٧﴾

பொருள்: [நபியே!] கூறுவீராக: "உங்களுடைய **பிரார்த்தனை** இல்லாவிட்டால், என்னுடைய இறைவன் உங்களைப் பொருட்படுத்தி இருக்கமாட்டான்; ஆனால் நீங்களோ [சத்தியத்தை] நிராகரித்துக் கொண்டே இருக்கின்றீர்கள். எனவே, அதன் வேதனை பின்னர் உங்களைக் கண்டிப்பாகப் பிடித்தே தீரும்"

எனவே, எனது சகோதரர்களே! நாம் **ரமதானின்** கடைசி நொடிப் பொழுதுகளில் இருந்த போதிலும், **ரமதானின்** முக்கிய அம்சமாகிய "லைலதுல் கத்ர்" இரவு கடந்து விட்ட போதிலும், மீதமுள்ள நேரங்களை, நமது நற்காரியங்கள் ஏற்றுக் கொள்ளப்படவும், நமது பாவங்களுக்கான **மன்னிப்பை** நமக்கு வழங்கப்படுவதற்கும் பிரார்த்தனை செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்வோமாக!

ஒருமுறை, இமாம் ஹஸன் அல்-பஸரீ [ரஹ்] அவர்கள் உபதேசம் செய்யும் போது: "உங்கள் பாவங்களுக்கான **மன்னிப்பைத்** தேடுவதை அதிகரித்துக் கொள்ளுங்கள்; காரணம், அல்லாஹ்வின் அருள் எப்போது இறங்கும் எனக்

கூற இயலாது” எனக் கூறினார்கள். எனவே, -அல்லாஹ்வே அதிகம் அறிந்தவனாக இருக்கின்றான்- **ரமதான்** முழுவதும் நாம் நிறைவேற்றிய நற்காரியங்களில் அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் நேர்மையான, மிகவும் மதிக்கத்தக்க நற்காரியம் ”துஆ” எனும் **பிரார்த்தனையாகும்.** இப்புனிதமிக்க மாதத்தின் கடைசி நொடிப் பொழுதுகளில் அதை நாம் தொடர்ந்து அதிகமாகச் செய்து வர வேண்டும்.

**யா அல்லாஹ்**!

எங்கள் உள்ளங்களை உனக்காகப் பணிய வைத்து, உன்னிடம் ஆதரவுகளை வைக்கின்றோம்; எங்களின் சாதாரணமான, அதிகக் குறைகளுடன் கூடிய வணக்க வழிபாட்டுச் செயல்கள் மூலம் உனது பெருந்தன்மையை எங்களுக்கு வழங்குமாறு உன்னிடம் கேட்டுக் கொள்கிறோம். எங்களின் நற்காரியங்களையும், நோன்பு மற்றும் தொழுகைகளையும், மற்ற வணக்க வழிபாட்டுச் செயல்களையும் ஏற்றுக் கொள்வாயாக! நீயே தாராள மனப்பான்மை கொண்டவனாகவும் அதிகக் கிருபையுடையவனாகவும் இருக்கின்றாய்.

**யா அல்லாஹ்**!

நீ எங்கள் மீது எண்ணற்ற அருள்களைப் பொழிந்துள்ளாய்; எண்ணற்ற வாய்ப்புகளை எங்களுக்கு வழங்கியுள்ளாய்; ஆனால், நாங்கள் உனக்குச் செலுத்தியுள்ள நன்றிகளோ மிகவும் குறைவு. எங்களின் பாவங்களும் தவறுகளும் அதிகமாக உள்ளன; உனது கட்டளைகளுக்கு முழுமையாக அடிபணிந்து நடக்கத் தவறி விட்டோம்; யா அல்லாஹ்! எங்களின் நிலைகளையும், மார்க்கம் சம்பந்தமான எங்களின் விஷயங்களையும், உலகம் சம்பந்தமான விவகாரங்களையும் சரி செய்வாயாக! மறுமையில் உனது மாட்சிமைக்கும் உனது தீர்ப்புக்கும் முன்பாக நாங்கள் நிற்கும் போது எங்களின் விவகாரங்களைச் சரி செய்வாயாக!

**யா அல்லாஹ்**!

உன்னிடமே நாங்கள் **பிரார்த்தனை** செய்கிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம்; யா அல்லாஹ்! நாங்கள் உன்னிடம் கேட்கும் கிருபை

எங்களுக்குக் கிடைக்கவில்லையெனில், வேறு எவரது கிருபை எங்களுக்கு உதவி செய்ய முடியும்? யா அல்லாஹ்! நாங்கள் எதிர்பார்க்கும் உனது **மன்னிப்பு** எங்களுக்குக் கிடைக்கவில்லையெனில், வேறு எவரது **மன்னிப்பு** எங்களின் பாவங்களையும், நாங்கள் வரம்பு மீறி நடந்து கொண்டதையும் மன்னிக்க முடியும்? யா அல்லாஹ்! **மன்னிப்பின்** மாதமாகிய இந்த **ரமதான்** மாதத்தில் எங்களின் பாவங்களை நீ மன்னிக்கவில்லையெனில், எங்கள் செயல்களின் பதிவேட்டைப் பரிசுத்தமாக்கும் வாய்ப்பு வேறு எப்போது எங்களுக்குக் கிடைக்கும்?

யா அல்லாஹ்! எங்களுக்கும் எங்களின் பெற்றோர்கள், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தார்களுக்குக் கிருபை காட்டுவாயாக! யா அல்லாஹ்! உன்னிடம் ஆதரவு வைத்துள்ள உனது அடியார்கள் அனைவருக்கும் கிருபை காட்டுவாயாக!

**رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَأَنْتَ خَيْرُ الرَّاحِمِينَ.**

**اللَّهُمَّ إِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنّا. اللَّهُمَّ إِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنّا. اللَّهُمَّ إِنَّكَ عَفُوٌّ كَرِيمٌ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنّا يَا كَرِيمُ.**

**رَبَّنَا وَتَقَبَّلْ دُعَاءَ. رَبَّنَا وَتَقَبَّلْ دُعَاءَ. رَبَّنَا وَتَقَبَّلْ دُعَاءَ.**

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْمُ.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيِّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِين وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا

رَبَّ العَالِمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.